# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## OS.No. 38/2021

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. மாரியம்மாள் **Pw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of April 2026.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 11 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) 09.10.1907 ல் வெளியப்ப தேவர் மற்றும் பரமாயி தபசில் சொத்தினை கிரையம் பெற்ற ஆவணத்தின் சப்ரி நகல் **வா.சா.ஆ. 1** ஆகும். 2) 29.01.1919 ல் வெளியப்பதேவர் பாண்டி நாயக்கருக்கு கிரையம் செய்து கொடுத்த ஆவணத்தின் சப்ரி நகல்

**வா.சா.ஆ. 2** ஆகும். 3) 20.01.2014 ல் பரமாயி மகள் சண்முகத்தாயம்மாள் ஏற்படுத்திய உயில் அவணத்தின் அசல் **வா.சா.ஆ. 3** ஆகும். 4) சண்முகத்தாயம்மாள் இறப்பு சான்றிதழின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 4** ஆகும். 5) வாதியின் கணவர் வாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தின் அசல் **வா.சா.ஆ. 5** ஆகும். 6) வாதி ஷாஜகான் என்பவருக்கு எழுதிக்கொடுத்த அடமான ஆவணத்தின் அசல் **வா.சா.ஆ. 6** ஆகும். 7) 26.11.2013 ம் தேதியில் 1 ம் பிரதிவாதி, 3 – 5 பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சப்ரி நகல் **வா.சா.ஆ. 7** ஆகும். 8) 01.12.2015 ல் 2 ம் பிரதிவாதி, 6 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சப்ரி நகல் **வா.சா.ஆ. 8** ஆகும். 9) 01.12.2015 ல் 2 ம் பிரதிவாதி, 7 ம் பிரதிவாதிக்க எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சப்ரி நகல் **வா.சா.ஆ. 9** ஆகும். 10) 26.08.2020 ல் 2 ம் பிரதிவாதி, 8 ம் பிரதிவாதிக்க எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சப்ரி நகல் **வா.சா.ஆ. 10** ஆகும். 11) தபசில் சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழின் கணிணி நகல் **வா.சா.ஆ.11** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District Judge, Tenkasi